# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்

**122 பேருந்துகள் இயக்க முடிவு**

சென்னை, ஜூன் 5: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில்திட்டத்தில், ரயில் சேவை தொடங்கும் போது, 122 மாநகர பேருந்துகள் மூலம் போக்குவரத்து இணைப்பை அதிகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 800 சைக்கிள்கள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிவடைந்து, வண்ணாரப்பேட்டை-விமானநிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாம் வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த இரு வழித்தடத்தில் தினமும் சராசரியாக் 90 ஆயிரம் பேர் பயணம் செய்கின்றனர்.

இதற்கிடையில், இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது. மாதவரம்-சிறுசேரி, மாதவரம்-சோழிங்கநல்லூர் உள்பட 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் மொத்தம் 119 கி.மீ. தொலைவுக்கு ரூ.85 ஆயிரத்து 47 கோடியில் திட்டப்பணிகள் நடைபெறவுள்ளன. இரண்டாவது கட்ட திட்டப்பணிகள் 2025-இல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டப்பணியில் முதல்சேவை தொடங்கும்போது, 122 பேருந்துகள் மூலம் போக்குவரத்து இணைப்பை அதிகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 800 சைக்கிள்கள் அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது, மெட்ரோ ரயில் பயணிகளுக்கு எளிதாக போக்குவரத்து வசதி கிடைக்கும் வகையில், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், மாதவரம்-சோழிங்கநல்லூர் இடையே முன்னுரிமை அடிப்படையில் கட்டுமானப்பணிகள் அடுத்த ஆண்டு தொடங்கவுள்ளது. இந்த பாதையில் திட்டப்பணி 2025-இல் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேருந்துநிலையம், மின்சார ரயில் நிலையங்களுடன் இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் நிலைய கட்டமைப்புகளை விரிவுப்படுத்த கவனம் செலுத்தப்படுகிறது. மெட்ரோ ரயில் பயணிகள் தங்கள் பயணத்தை எளிதாக தொடரும் விதமாக, ஷேர் ஆட்டோ, கார் வசதி, சைக்கிள் வசதி, மற்றும் மாநகர பேருந்து வசதியை விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் வழித்தடத்தில 32 நிலையங்கள் உள்ளன. இதில் 16 நிலையங்களில் இருந்து சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 13 நிலையங்களில் இருந்து ஷேர்ஆட்டோ, கார்கள் இயக்கப்படுகின்றன. ஆனாலும், புதியதாக தொடங்கப்பட்ட வண்ணாரப்பேட்டை- டிஎம்எஸ் மெட்ரோ ரயில்நிலையங்களில் போக்குவரத்து இணைப்புவசதி கொடுக்கவில்லை. அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் பயணிகளுக்கு பேருந்து, ஷேர் ஆட்டோ, டாக்சி வசதியை அதிகப்படுத்தினால் பயணிகள் எண்ணிக்கை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான நடவடிக்கையில் மெட்ரோ ரயில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

இது குறித்து போக்குவரத்து மேம்பாட்டு கொள்கை நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: மெட்ரோ ரயில் பயணிகளை ஊக்கப்படுத்த சிறிய பேருந்துகள், ஷேர் ஆட்டோக்களை அதிகளவில் அறிமுகப்படுத்த வேண்டும். இதன்மூலம், முதல்கட்ட மெட்ரோ திட்டத்தில், மெட்ரோ ரயில் பயணிகள் எண்ணிக்கை 7 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

**ஆய்வு செய்கிறோம்:**

இது குறித்து மெட்ரோ ரயில்நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கிறது. 2-ஆம் கட்ட மெட்ரோ ரயில் சேவை தொடங்கும்போது, பயணிகள் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து எளிதாக பல்வேறு பகுதிகளுக்கு செல்ல வசதியாக இணைப்பு போக்குவரத்து வசதியை முழுமையாக செய்ய ஆய்வு செய்கிறோம் என்றார் அவர்.



இது குறித்து போக்குவரத்து மேம்பாட்டு கொள்கை நிறுவன அதிகாரி ஒருவர் கூறியதுः மெட்ரோ ரயில் பயணிகளை ஊக்கப்படுத்த சிறிய பேருந்துகள், ஷேர் ஆட்டோக்களை அதிகளவில் அறிமுகப்படுத்த வேண்டும். இதன்மூலம், முதல்கட்ட மெட்ரோ திட்டத்தில், மெட்ரோ ரயில் பயணிகள் எண்ணிக்கை 7 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது